மாதிரித் தேர்வு 2022 –2023
சமூகஅறிவியல்

வகுப்பு : 6
நேரம் : 2.30 மணி மதிப்பெண்: 60

I **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:** 7×1=7

1) கரிகாலன் ஏழு ஸ்வரங்கள் பற்றி அறிந்திருந்ததால் அவர் பெற்ற சிறப்பு பெயர் என்ன?

அ) இசைவல்லான் ஆ) ஏழிசை வல்லான் இ) சங்கீத வித்வான் ஈ) இசை மேதை

2) கொடுக்கப்பட்டுள்ள தெரிவுகளில் அரசன் என்பதற்குரிய தவறான பொருளினைதேர்ந்தெடு.
அ) வேந்தன் ஆ) கொற்றவன் இ) இறைவன் ஈ) கோமகன்

3) குப்தர் காலத்தில் வேளாண்மைக்கு உகந்த நிலங்களை எவ்வாறு அழைத்தனர்?
அ) வஸ்தி ஆ) கிலா இ) சேத்ரா ஈ) அப்ரகதா

4) எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோஸ் இடையில் அமைந்துள்ள மலையிடைப் பீடபூமி
அ) திபெத் ஆ) ஈரான் இ) தக்காணம் ஈ) யுனான்

5) ஐரோப்பா கண்டம் தீபகற்பங்களின் தீபகற்பம் என அழைக்கப்படுவது ஏன்?

அ) ஐரோப்பா மூன்று பக்கம் நிலத்தால் சூழப்பட்டுள்ளது
ஆ) ஐரோப்பா கண்டம் தீபகற்பமாக உள்ளது
இ) ஐரோப்பா , தீபகற்பத்திற்குரிய பண்பை பெற்றுள்ளது
ஈ) ஐரோப்பா தீபகற்ப கண்டத்திற்குள் பல தீபகற்ப நாடுகளைகொண்டுள்ளது

www.Padasalai.Net

6) கொடுக்கப்பட்டுள்ள தெரிவுகளில் நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் யாவர்?
அ) கல்வியாளர் ஆ) நிலக்கிழார் இ) பிரதிநிதிகள் ஈ) 18 வயது நிரம்பியவர்

7) கீழ்க்காணும் சாலைவிதிகளில் பொருந்தாத ஒன்றை தேர்வு செய்க.

அ) சிவப்பு – நில் ஆ) மஞ்சள் – கவனி இ) பச்சை – செல் ஈ) நீலம்– வேகமாக செல்

II **கோடிட்ட இடங்களை நிரப்புக :-** 6×1=6

8) வெண்ணி போரில் வெற்றி பெற்றவர் ___________
9) ஹாலா எழுதிய நூலின் பெயர் _______________
10) ஐரோப்பாவின் இரண்டாவது உயரமான சிகரம் ___________
11) உலகின் நேர மண்டலங்களின் எண்ணிக்கை________________
12) கடற்கரையோரத்தில் வசிக்கும் மக்கள் __________ பேரிடரால் அதிகமாகப் பாதிக்கப் படுகின்றனர்.
13) நம் நாட்டில் ___________ மக்களாட்சி செயல்படுகிறது.

33502802



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**III பொருத்துக :-** 5×1=5

| | | | |
|---|---|---|---|
| 14) | அதியமான் | – | வடக்கு கடல் |
| 15) | இராட்டிரக் கூடர்கள் | – | நிரந்தர அமைப்பு |
| 16) | தேம்ஸ் | – | வெளிர் |
| 17) | ஐரோப்பிய ஒன்றியம் | – | மான்ய கேட்டா |
| 18) | கிராம சபை | – | யூரோ |

**IV ஒன்றிரண்டு வாக்கியங்களில் விடையளி. (ஏதேனும் ஏழு)** 7×2=14

19) கடையேழு வள்ளல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
20) காளிதாசரின் 'மாளவிகாக்னிமித்ரம்' குறித்து சிறு குறிப்பு வரைக.
21) நாளந்தா பல்கலைக்கழகத்தில் கற்றுத்தரப்பட்ட பாடப்பிரிவுகள் யாவை?
22) 'கடிகை' பற்றி நீங்கள் அறிந்ததென்ன?
23) 'வேறுபாடுகளின் நிலம் ஆசியா' – நிரூபி.
24) ஜியாய்டு என்பது என்ன?
25) பேரிடரின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுத் தருக.
26) நம் அரசமைப்புச் சட்டத்தின் சிறப்புகளாக நீ புரிந்து கொள்வன யாவை?
27) மாநகராட்சியின் பணிகள் சிலவற்றை பட்டியலிடுக.
28) போக்குவரத்துக் குறியீடுகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**V விரிவான விடையளி. (ஏதேனும் நான்கு)** 4×5=20

29) களப்பிரர்களின் காலம் இருண்ட காலம் அல்ல. காரணங்கள் தருக.
30) கட்டடக் கலைக்கு பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பைத் திறனாய்வு செய்க.
31) ஆசியக் கண்டத்திற்கும் ஐரோப்பிய கண்டத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளை எழுதுக.
32) இந்தியாவின் திட்டநேரத்தைப் பற்றி விளக்குக.
33) மனிதனால் உண்டாகும் பேரிடர்களை விளக்குக.
34) கிராம மற்றும் நகர மேம்பாட்டிற்கு உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன எவ்வாறு ?.

**VI வரைபடம்** 2×4=8

35) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
1) காஞ்சி 2) மதுரா 3) நாளந்தா 4) ஜூனாகத்

36) கொடுக்கப்பட்டுள்ள ஆசிய வரைபடத்தில் கீழ்க்காணும் கடல்களைக் குறிக்கவும்.
1) இந்தியப் பெருங்கடல் 2) பசுபிக் பெருங்கடல் 3) செங்கடல்
4) கருங்கடல்

*************************



www.Padasalai.Net 3150603602

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com